# வெள்ளோட்டில் 19-ல் காளிங்கராயன் சிலை திறப்பு

ஈரோடு, ஜன. 17: 725 ஆண்டுகளுக்கு முன்பே நதிகள் இணைப்புக்கு வழிகாட்டிய காளிங்கராயனின் சிலை திறப்பு விழா வெள்ளோட்டில் ஜன.19-ம் தேதி நடைபெறுகிறது.

725 ஆண்டுகளுக்கு முன்பே நதிநீர் இணைப்புக்கு முன்னோடியாக விளங்கியவர் காளிங்கராயன். பவானி மற்றும் நொய்யல் ஆறுகளை கால்வாய் மூலம் இணைத்து சரித்திரம் படைத்தவர். ஈரோடு மாவட்டம் வேளாண்மையில் முன்னிலையில் இருப்பதற்கு இவரும் முக்கிய காரணம்.

இவரது பெயருக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஈரோடு பொதுப்பணித்துறை ஓய்வு இல்லத்துக்கு காளிங்கராயன் இல்லம் என பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் இல்லத்தின் முகப்பு பகுதியில் கல்வெட்டும் அரசு சார்பில் திறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காளிங்கராயன் சிலை திறப்பு விழா் வெள்ளோட்டில் ஜன.19-ம் தேதி நடைபெறுகிறது. விழாவுக்கு சென்னிமலை ஊராட்சி ஒன்றிய தலைவர் கே.சின்னுசாமி கவுண்டர் தலைமை தாங்குகிறார். மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் மணி (எ) பி.செங்கோட்டையன் முன்னிலை வகிக்கிறா்ர்.

தென்முகம் வெள்ளோடு சாத்தந்தை குலம் ராசாசுவாமி நற்பணி மன்றத் தலைவர் என்.டி.கண்ணுசாமி வரவேற்கிறார். தமிழக கைத்தறித்துறை அமைச்சர் என் கேகே.பி.ராஜா, காளிங்கராயன் சிலையை திறந்துவைக்கிறார்.

"வெள்ளோடு காணிக்கையாளர்கள் வரலாற்று நூல்" என்னும் புத்தகத்தை மத்திய சமூக நீதித் துறை இணை அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் வெளியிடுகிறார். பழனி மக்களவை உறுப்பினர் எஸ்.கே.கார்வேந்தன் பெற்றுக் கொள்கிறார்.

காங்கயம் எம்.எல்.ஏ. விடியல் எஸ்.சேகர், காளிங்கராயன் வாரிசுதாரர்களை கௌரவிக்கிறார். மொடக்குறிச்சி எம்.எல்.ஏ. ஆர்.எம்.பழனிச்சாமி, காளிங்கராயனின் 37-வது தலைமுறை வாரிசுதாரர் ஏ.எம்.ஆர்.காளிங்கராயர், கல்வெட்டு ஆய்வாளர் பெ.ராசு, கனகபுரம் ஊராட்சித் தலைவர் கே.ஏ.மகுடேஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

ஏற்பாடுகளை சிலை அமைப்புக் குழுத் தலைவர் என்.டி.கண்ணுசாமி, செயலர் கே.டி.கொற்றைவேல், பொருளாளர் கே.சண்முக ராமசாமி ஆகியோர் செய்து வருகின்றனர்.